விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 058 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 03 சனிக்கிழமை (15.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### அதானி காற்றாலைத் திட்டம்

## வேறு நாடுகளுக்கு வழங்கும் எண்ணம் அரசிடம் இல்லை

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அதானி நிறுவனத்தின் காற்றாலைத் திட்டத்தை சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ மாற்றி வழங்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் 15

## மின்வெட்டுத் தொடர்பில் அரசு அறிவிக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

கடந்த வாரம் நாட்டில் ஏற்பட்ட மின்வெட்டுத் தொடர்பில் அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 15

# உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலம்

# அரசியலமைப்புக்கு விரோதமானது

### பெரும்பான்மையுடன் சரத்துக்கள் நிறைவேற்ற வேண்டும்
### நீதிமன்றத் தீர்ப்பை பாராளுமன்றில் அறிவித்த சபாநாயகர்



*(கொழும்பு)*

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது எனவும் அதனைப் பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை, பாராளுமன்றில் அறிவித்த சபாநாயகர் இதனைத் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று யாழ்.விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று காலை கோப்பாய் கலாசாலையில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளும் பிரதமர், அதன் பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் நடை 15

### வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து

## வடக்கில் இளைஞர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

### பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தைகளைக்கூறி இளையோரை ஏமாற்றிப் பணம் பறிக்கும் சம்பவங்கள் வடக்கில் அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமான முறைகளில் ஆட்கடத்தல் 16

## புதுக்குடியிருப்பில் கசிப்புடன் ஒருவர் கைது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் விற்பனைக்கு தயாராக இருந்த கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. 15

## ‘பொலிஸ் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யாதே’

### பொதுமக்கள் பெயரில் கோப்பாயில் பதாகை



மாற்றாதே! மாற்றாதே!
இரண்டு மொழிகளும் தெரிந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை மாற்றாதே.
-பொதுமக்கள்-

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்ய வேண்டாம் என அந்தப் பகுதிகளில் பொதுமக்கள் பெயரில் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. 15

## அச்சுவேலியில் மயங்கிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேசன் வேலை செய்வதற்காக அச்சு 15

## கம்பியால் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முறிப்புப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த மோகன்கோகுலன் (வயது-36) என்ற 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொது அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**கீரிமலை நகுலேஸ்வர ஆலயம்**
**மகா சிவராத்திரி உற்சவம் - 2025**

**வாகனத்தரிப்பிடம் மற்றும் தலைக்கவச பாதுகாப்பு நிலையம் குத்தகைக்கு வழங்கல்**

2025.02.24 முதல் 2025.02.27 வரை குறித்த சேவைக்கான கேள்வி கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் 2025.02.19ம் திகதி புதன்கிழமை பி.ப 2.00மணிக்கு முன்னதாக உரிய கேள்விப்படிவங்களை பூரணப்படுத்தி சமர்ப்பிக்கலாம்.
மேலதிக நிபந்தனைகள் மற்றும் தகவல்கள் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு இல - உப அலுவலகம் : 021 224 4180
தலைமை அலுவலகம் : 021 224 1130

(C-2266)

க.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
15.02.2025


# கஜேந்திரகுமார் எம்.பிக்கு நீதிமன்றத்தால் பிணை

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை இடிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பிணை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையை இடித்து அகற்ற சமூக வலைத்தளங்களில் துண்டுப்பிரசுரத்தை பரப்பினார் என்ற குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தினால் அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரான பாராளுமன்ற உறுப்பினரை ஒரு இலட்சம் ரூபாய் சொந்தப் பிணையில் விடுவித்த நீதவான் வழக்கை ஜீன் 26ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி மகிந்தன், நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை இடிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பாக பலாலிப் பொலிஸார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது குற்றஞ்சாட்டி வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த துண்டுப்பிரசுரம் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட நிலையில் அது போலியானது எனத் தெரிவித்து ஊடக சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெளிவுபடுத்தியதுடன் தனது சமூக வலைத்தளத்திலும் போலிச் செய்தி எனக் குறிப்பிட்டு பகிர்ந்திருந்தார்.

(ம-7,33)


**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 03 . 08 . 1930 — உதிர்வு 09 . 09 . 2019




மலர்வு 08 . 11 . 1937 — உதிர்வு 15 . 02 . 2020




திரு. செம்பர் முருகேசு   திருமதி முருகேசு வரதநாயகி

எத்தனை ஆண்டுகள் ஆனாலென்ன
இத்தரை மீதிலே இன்னினைவாய்
நித்தியம் நினைத்திருப்போம்
நித்தமும் கைதொழுவோம்.

உம் நினைவுகளுடன் : மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(833)




**வேலைவாய்ப்பு வெற்றிடம்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் நம்பிக்கையின் ஊற்று பதிவு செய்யப்பட்ட சமூக தொண்டார்வ நிறுவனத்திற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கிராம ரீதியாக பணியாற்ற உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட உள்ளார்கள். விருப்பமுடையோர் நேர்முகத்தேர்விற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

1. கல்வித் தகைமை க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்
2. 50 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்
3. மாத ஊதியம் - 45,000.00
4. நேர்முகத் தேர்வுத் திகதி : 20.02.2025, வியாழக்கிழமை, மு.ப 9.30 மணி
5. நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் : சோலை வனம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(C-2268)


# மரண அறிவித்தல்



மலர்வு 28.06.1957   உதிர்வு 13.02.2025

## ஆறுமுகம் சந்திரசேகரம்

(சுன்னாகம் விஸ்ணு கரன்ஸ் பான்சி – உரிமையாளர்)

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரசேகரம் அவர்கள் 13.02.2025 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னமுத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் அமரர் PT குமாரசாமி(ஓய்வு பெற்ற ஆசிரியர்), அமரர் கனகசபை(அன்னம் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), அமரர் வேலாயுதபிள்ளை(AVP - சுன்னாகம்), அமரர் நாகேஸ்வரி, டாம்பிகாதேவி(கிளிநொச்சி), அமரர் நவரத்தினம்(முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்), இராஜேஸ்வரி(வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி, அமரர் கனகம்மா(பிரான்ஸ்), லோகாம்பிகை, அமரர் கனகசிங்கம், அரியமலர் (சோதி மாளிகை), தனபாலசிங்கம்(VTS கந்தானை), உருத்திரசிங்கம்(பிரான்ஸ்), அமரர் வன்னியசிங்கம், தர்மகுலசிங்கம்(லண்டன்), சோதிமலர்(லண்டன்), ஆகியோரின் மைத்துனரும் விஜயகாந்தன், விஸ்ணுகரன்(லண்டன்), விஜயரூபன் (விஸ்ணு கரன்ஸ் பான்சி - சுன்னாகம்), விஜயதாஸ் (லண்டன்), விஜயானந்தா(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவிதா, ஜஸ்விக்கா, ஜெயவீரலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரிவியன், அருஷா, அபிநயா, அபிருத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 16.02.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

021 224 1290
077 581 1192
077 929 5932

தகவல் :
குடும்பத்தினர்

(3427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழமைக்குத் திரும்பியது
# மின் விநியோகம்
## எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

மின் விநியோகத் தடை அமுல்படுத்தப் படமாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக் கிழமை நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் 3 மின் பிறப்பாக்கிகள் செயலிழந் திருந்தன.

இதன் காரணமாக, மின் சாரத் தேவையை நிர்வகிக்க முடியாததால், கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் சுழற்சி முறையில் ஒன்றரை மணி நேர மின் விநியோகத் தடையை அமுல்படுத்த இலங்கை மின்சார சபைக்கு நேரிட்டதுடன் அதேநேரம் சுழற்சி முறையில் ஒரு மணி நேரம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்பட்டது.

மேலும் செயலிழந்த 3 மின் பிறப்பாக்கிகள் நேற்றுக் காலை தேசிய மின் கட்டமைப்புடன் மீண்டும் இயக்கப்பட்டுள்ளதால் மின் விநியோகத் தடையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு
## விசேட சோதனைகள்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. அத்துடன், கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பில் முறைப்பாடளிக்குமாறும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் மாத்திரம் 2,700 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

# அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் சட்டம் பாயும்!
## நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரிக்கை



(கொழும்பு)

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைக்கமைய சந்தையில் அரிசியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார். (நி-8)

# ஜூலி சங்கை அழைத்து விசாரணை நடத்துங்கள்
## அமெரிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் சரத்வீரசேகர

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.



பிரிவினைவாதத்துக்கு எதிரான கூட்டணியினர் கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இறையாண்மைக்கும், சுயாட்சிக்கும் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அத்துடன் வியன்னா ஒப்பந்தத்தையும் மீறியுள்ளார்.

எமது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் போது அமெரிக்கத் தூதுவர் முறையற்ற வகையில் செயற்பட்டார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

ஆகவே இவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரலுக்குப் பின் நடத்துங்கள்
## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் நடத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளன.

பதிவு செய்யப்பட்ட 13 கட்சிகளின் செயலாளர்கள் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் பாதீடு விவாதம் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை என்பன நடைபெறவுள்ளன.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு உரிய தினத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (நி-8)

# அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க நடவடிக்கை
## ராஜித சேனாரத்ன



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வேறுபல கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## விக்கெட் கீப்பர் விவகாரம் ராகுலுக்கா, பண்ட்டுக்கா இடம்?



இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கவுதம் கம்பீர், சம்பியன்ஸ் டிராபி பிளெயிங் லெவனில் விக்கெட் கீப்பர் பட்ஸ்மேன் இடம் யாருக்கு என்பது குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

இங்கிலாந்துக்கெதிரான தொடர் முடிந்ததும் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய கம்பீர், தனிநபர்களைப் பற்றி பேசுவது மிகவும் கடினம். இருப்பினும், ரிஷப் பண்ட்டுக்கான வாய்ப்பு கிடைக்கும்போது அணியில் இடம்பிடிப்பார் என்று என்னால் கூற முடியும்.

ஆனால், இப்போதைக்கு விக்கெட் கீப்பர் இடத்துக்கு ராகுல்தான் நம்பர் ஒன் சாய்ஸ்.

அணியில் இரண்டு விக்கெட் கீப்பர்களை நீங்கள் பெற்றிருக்கும் போது அவர்கள் இருவரையும் அதே தரத்துடன் நீங்கள் விளையாட வைக்க முடியாது.

எனவே, பண்ட் வாய்ப்பு கிடைக்கும் போது அதற்குத் தயாராக இருக்க வேண்டும். என்று கூறினார். சம்பியன்ஸ் டிராபி தொடர் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடங்கவிருக்கிறது. நடப்பு சம்பியன் பாகிஸ்தான் நடத்தும் இந்தத் தொடர் ஹைபிரிட் மாடலில், பாகிஸ்தான் மற்றும் டுபாயில் (இந்தியா ஆடும் போட்டிகள் மட்டும்) நடைபெறும்.

இதற்கான, 8 அணிகளின் வீரர்களின் பட்டியலும் வெளியாகிவிட்டது. இதில், இந்திய அணியில் முதற்கட்ட பட்டியலில் இடம்பெற்றிருந்த பும்ரா, ஜெய்ஸ்வால் ஆகியோர் நீக்கப்பட்டு ஹர்ஷித் ராணா, வருண் சக்ரவர்த்தி ஆகியோர் இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## ஐ.பி.எல் போட்டி தொடரில் மாற்றம்




ஐ.பி.எல் தொடரின் 18 ஆவது சீசன் மார்ச் மாதம் 21ஆம் திகதி தொடங்கும் என முன்னர் தகவல் வெளியாகியிருந்த நிலையில் தற்போது அது22ஆம் திகதி மாற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஆரம்ப விழா கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆரம்பப் போட்டியில் நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து மார்ச் 23ஆம் திகதி ஐதராபாத்தில் நடைபெறும் 2ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்ளவுள்ளது.

தொடரின் 2ஆவது தகுதிச் சுற்று மற்றும் இறுதிப்போட்டி கொல்கத்தாவில் நடைபெறும் எனவும், முதலாவது தகுதிச் சுற்று மற்றும் வெளியேற்றுதல் சுற்று ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடைபெறும் எனவும் கூறப்படுகிறது.

10 அணிகள் கலந்து கொள்ளும் இந்த தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் 577 வீரர்கள் பங்கேற்றனர். மொத்தத்தில் 62 வெளிநாட்டவர் உட்பட 182 வீரர்கள் 639.15 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம்



ஒருநாள் போட்டியில் விதிகளை மீறியதற்காக 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐசிசி அபராதம் விதித்துள்ளது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் தென்னாப்பிரிக்கா துடுப்பெடுத்தாடும் போது 28ஆவது ஓவரில் ஷாகின் ஷா அப்ரிடி வேண்டுமென்றே மேத்திவ் பிரிட்ஜ்கி ஓடும்போது இடைமறித்தார். பின்னர், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் அவருக்கு 25 சதவிகிதம் அபராதம் விதிக்கப்பட்டது. அடுத்ததாக 29ஆவது ஓவரில் டெம்பா பவுமா விக்கெட்டினை அவருக்கு அருகில் நெருக்கமாகச் சென்று கொண்டாடியதற்காக ஷகில், குலாம் ஆகிய இருவருக்கும் போட்டி ஊதியத்திலிருந்து 10 சதவிகிதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சமீபத்தில் பிஜிடி தொடரில் சாம் கான்ஸ்டாஸை மோதிய விராட் கோலிக்கு 20 சதவிகிதம் அபராதம் விதித்ததும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## சவூதி புரோ லீக் போட்டியில் 3-2 கோல் கணக்கில் நஸர் அணி வெற்றி



சவூதி புரோ லீக் போட்டியில் அல் நஸர் அணி 3-2 என்ற கோல் கணக்கில் அல் அஹ்லி சவூதி அணியை வீழ்த்தியது.

கிங் அப்துல்லா ஸ்போர்ட்ஸ் சிட்டி மைதானத்தில் நடந்த போட்டியில் அல் நஸர் மற்றும் அல் அஹ்லி சவூதி அணிகள் மோதின.

ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்திலேயே ஜோன் டுரான் (அல் நஸர்) கோல் அடித்தார்.

அதன் பின்னர் இரு அணி வீரர்களும் கடுமையாக மோதியதால் முதல் பாதியில் மேற்கொண்டு கோல் ஏதும் விழவில்லை.

ஆனால் இரண்டாம் பாதியில் ஆட்டம் சூடுபிடித்தது. 47ஆவது நிமிடத்தில் அல் நஸரின் முஹமது சிமகன் எதிரணி வீரரை கையால் தாக்கினார்.

இதனால் அவருக்கு ரெட் கார்ட் காட்டப்பட்டு உடனே வெளியேற்றப்பட்டார். மேலும், அல் அஹ்லி சவூதி அணிக்கு விழுந்த கோலும் மறுக்கப்பட்டது.

பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் அல் அஹ்லி சவூதி வீரர் இவான் டோனி தலையால் முட்டி கோல் (78ஆவது நிமிடம்) அடித்தார்.

அடுத்த 2 நிமிடங்களில் அல் நஸரின் அய்மான் யஹ்யா அடித்த ஷாட்டை கோல் கீப்பர் தடுத்தார். எனினும் வெளியே வந்த பந்தை மீண்டும் மின்னல் வேகத்தில் உள்ளே தள்ளி கோலாக மாற்றினார்.

ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் டுரான், பாதி மைதானத்தில் இருந்து பந்தை தனியாளாக கொண்டு சென்று கோலாக்கினார்.

இந்தக் கோல் அல் நஸர் அணிக்கு 3ஆவது கோலானது. பின்னர் வழங்கப்பட்ட கூடுதல் நிமிடத்தில் (90+8) அல் அஹ்லி சவூதி அணி வீரர் சுமாயின் அல் நபிட் கோல் அடித்தார்.

எனினும் அல் நஸர் அணி 3-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இப்போட்டியின் இரண்டாம் பாதியில் ரொனால்டோ களம் காணவில்லை என்றாலும், "கடைசிவரை வெற்றி தொடரும்" என தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் புகையிரத சேவை மொரட்டுவ வரை நீட்டிப்பு

## யாழ்.புகையிரத நிலைய அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டை வரை செல்லும் தபால் புகையிரத சேவை நேற்று 14 ஆம் திகதி முதல் மொரட்டுவ வரை செல்வதாக யாழ்.புகையிரத நிலைய அத்தியட்சகர் தே.சுரேந்திரன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு கோட்டை வரை சேவை வழங்கிய குறித்த புகையிரத சேவை பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை, கல்கிசை மற்றும் மொரட்டுவ வரை சேவை வழங்கத் தொடங்கியுள்ளதாக தெரிவித்த அவர், தினமும் இரவு 8 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் தபால் புகையிரம் 8.30 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்தை வந்தடைந்து அதிகாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

அதேபோல, தினமும் மாலை 6.55 மணியளவில் மொரட்டுவவில் இருந்து புறப்படும் புகையிரதம் இரவு 8 மணிக்கு கோட்டையை வந்தடைந்து அங்கிருந்து புறப்பட்டு அதிகாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடையும் எனத் தெரிவித்தார். (க-8)

# எல்ல பகுதியில் பரவும் காட்டுத்தீ

(ஹற்றன்)



எல்ல சுற்றுலா நகரத்திற்கு அருகிலுள்ள எல்ல பாறை பகுதியில் ஏற்பட்ட தீ, தற்போது எல்ல மலைத்தொடர் முழுவதும் பரவும் அபாயத்தில் உள்ளது.

பண்டாரவளை வன பாதுகாப்பு அதிகாரிகள், எல்ல பிரதேச செயலகம் மற்றும் தியத்தலாவை விமானப் படை மற்றும் இராணுவ அதிகாரிகள் தீயை அணைக்க கடுமையாக செயற்பட்டு வருகின்றனர்.

காற்றின் வேகம் மற்றும் செங்குத்தான சரிவுகள் காரணமாக தீயைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் வனவிலங்கு மண்டலத்திற்கு மேலே உள்ள வனப் பாதுகாப்பு மண்டலத்திற்குள் தீ நுழைவதைத் தடுக்க, வனப் பாதுகாப்பு அதிகாரிகளின் தலையீட்டால் வன எல்லையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், தீ எல்ல-வெல்லவாய பிரதான வீதியை அடைவதைக் கட்டுப்படுத்த பண்டாரவளை மாநகர சபையின் தீயணைப்பு வாகனங்களின் உதவியைப் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (நி-8)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு துருக்கி எப்போதும் துணை நிற்கும்

## துருக்கி தூதுவர் உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் என துருக்கி தூதுவர் செமி லூட்பு டர்கட் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத் திட்டத்திற்கு துருக்கிகுடியரசின் பாராட்டுகளைத் தெரிவித்த தூதுவர், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் கிராமிய மக்களின் வறுமையை மட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தேவையான ஆதரவை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க மற்றும் துருக்கி குடியரசின் தூதுவர் செமி லூட்பூ டர்கட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை துருக்கியில் கல்வி கற்க இலங்கை மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 15 புலமைப்பரிசில் கோட்டாவை 25 புலமைப்பரிசிலாக அதிகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# பரசூட் முறையில் நடுகை செய்யப்பட்ட நெல் அறுவடை



(தருமபுரம்)


பரசூட் முறையில் Bg 366 வெள்ளை இன நெல் நடுகை செய்யப்பட்ட வயல் அறுவடை விழா நேற்று தருமபுரம் கிழக்கு பகுதியில் நடைபெற்றது.

தருமபுரம் பகுதிக்குரிய விவசாய போதனாசிரியர் க.சரணியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

நவீன விவசாயத் தொழில் நுட்பங்களை வழங்கி, விவசாய உற்பத்தி மூலம் விவசாயிகள் உச்ச பலனடையும் முகமாக விவசாய திணைக்களத்தினரால் வயல் விழா முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 11 1967



மறைவு 16 01 2025

அமரர்.பூலோகசிங்கம் சர்வானந்தன்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. சுகந்தி பிரகாந்தன் அவர்களின் பாசமிகு சகோதரன் அமரர்.பூ.சர்வானந்தன் அவர்களை 31 ஆம் நாளில் நினைவு கூருவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை


# இராசிபலன்

15.02.2025
மாசி 03, சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 11.50 மணிவரை

உத்தரம் பின்னிரவு 1.41 மணிவரை
சுபநேரம் 3.33-5.03 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை

சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்:** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரச வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கல்யாண கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்:** பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணவரவு திருப்தி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**கடகம்:** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**சிம்மம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும் இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணத் தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு.

**தனுசு:** எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், மாற்றினத்தவர் மூலம் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல்நலனில் அதிக கவனம் தேவை, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**மீனம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**தெய்வம் உதவ நினைத்தால் அதை தடுத்து நிறுத்த முடியாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை மீண்டும் எழுப்ப அனுமதிக்க முடியாது

## தையிட்டி விவகாரம் குறித்து அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

**தையிட்டி விகாரை விவகாரம் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப விடக் கூடாது. அதனால் அடிப்படையில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகுவதை அனுமதிக்க முடியாது.

விகாரை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள், அப்பிரதேச மக்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர்களுடன் விரைவில் பேசவுள்ளோம்.

விகாரை கட்டப்பட்டுள்ள காணியை மாத்திரம் தருமாறும், விகாரையை சுற்றியுள்ள ஏனைய காணிகளை மக்களிடம் மீளக் கையளிக்க தயாராக உள்ளதாகவும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே விகாரை விவகாரத்தில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதனை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்போம்எனதெரிவித்தார். (6-8-33)

# மாவட்ட செயலகம் முன்பாக வேலையில்லா பட்டதாரிகள்

## கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)


வேலை வாய்ப்பினை வழங்குமாறு கோரி வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டமானது மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அதில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இந்தப் போராட்டமானது முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிதி தொடர்பான கலந்துரையாடல்




(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வறுமைக்கோட்டுக் குட்பட்ட கிராமங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், வீதிப் புனரமைப்புக்கள், யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவை புனரமைத்தல், நிலத்தடி நீர் மாசடைதல், கழிவுகள் மீட்டெடுத்தல், நன்னீர் குடிநீர்த் திட்டம், சந்தைப் படுத்தல் உட்கட்டமைப்பு, உள்ளூர் கடன், உற்பத்திகள், தேசிய அபிவிருத்தி திட்டமிடல், ஒருங்கிணைந்த கிராமிய சமூக பொருளாதாரக் கட்டமைப்பினை வலுப்படுத்தல் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான பொ.கஜேந்திரகுமார், வைத்தியர் வ.பவானந்தராஜா, பொ.ரஜீவன் மற்றும் இளங்குமரன், மேலதிக அரச காணி அதிபர் ஸ்ரீ மோகனன், திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரகுமார், வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபாலன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பதவி நிலை அதிகாரிகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (6-8-33)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோய்த்தடுப்பு பராமரிப்புச் சேவைப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட பாலம் நிறுவனத்தின் நிதி உதவியில் வன்னி ஹோப் நிறுவனம் ஊடாக மூன்று மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

## கட்டுத் துவக்குடன் ஒருவர் கைது

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி - முள்ளியவளைப் பகுதியில் கட்டுத்துவக்கு வைத்திருந்த ஒருவரை முழங்காவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

30 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த கைது இடம்பெற்றது.

குறித்த நபரை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# யாழில் வெற்றுக் கிருமிநாசினி போத்தல்கள் கொள்முதல் வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகள் பயன்படுத்துகின்ற கிருமி நாசினிகளின் வெற்றுப் போத்தல்களைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாகப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

விவசாயிகள் பயன்படுத்துகின்ற கிருமிநாசினிகளின் போத்தல்களை சூழலில் வீசாது தமது தோட்டப் புறத்தில் குவித்தால் அவற்றைத் தமது விவசாயத் திணைக்களம் கொள்வனவு செய்யும் எனவும் அவ்வாறு இல்லாவிட்டால் அவற்றை எமது திணைக்களத்திடம் ஒப்படைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

விவசாயக் கமநலத் திணைக்களங்கள் மற்றும் விவசாய நிறுவனங்கள் இணைந்து இவற்றை மீள் சுழற்சி செய்யக்கூடிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்காக குறித்த போத்தல்களினைக் கொள்வனவு செய்கின்றனர்.

எனவே மண்ணை வளப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கு சுத்தமான சூழலைக் கையளிக்கும் நோக்கமாக விவசாயிகள் இந்த வேலைத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

மேலும் விவசாயத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத கிருமி நாசினிகளைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் தெரிவித்தார். (6-8)

## மின் ஒழுக்கினால் எக்ஸ்ரே பிரிவில் தீ

(தருமபுரம்)

கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் எக்ஸ்ரே கதிர் வீச்சுப் பிரிவில் மின்ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீப்பரவல் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தீயினைக் கட்டுப்படுத்த வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட தீயணைப்புக் கருவிகளைப் பயன்படுத்திய போது செயலிழந்து காணப்பட்டது.

இதனையடுத்து புதிதாக கட்டப்பட்டுள்ள விசேட பெண்கள் மருத்துவமனை கட்டடத்தில் இருந்த தீயணைப்பு கருவிகளைக் கொண்டு தீயினை கட்டுப்படுத்தியிருந்தனர். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவர் படுகாயம்

## முள்ளியவளையில் சம்பவம்

(நெளுக்குளம்)

முள்ளியவளை முறிப்பு பகுதியில் இடம்பெற்ற கைக்கலப்பில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதா வது,

குழுவாக இணைந்து ஒருவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள் ளனர். பின் வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளியவளை முறிப்பு பகுதியைச் சேர்ந்த நபரே காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ் சோலை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (6-8-299)



## 70 ஆவது அகவை விழா

யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய ஓய்வுநிலை அதிபர், பொற்பதி அறிவாலயத் தலைவர்.

உயர்திரு. **கணிதச்சுடர் சண் வாமதேவன்**

இடம் : பொற்பதி அறிவாலயம் கொக்குவில்.
காலம் : 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி

தலைவர் - பேராசிரியர்.க.தேவராஜா

**அனைவரையும் அகவை விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

அகவை விழா ஏற்பாட்டுக்குழு

(C-2263)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
### 69, சத்தியக்காட்டுச் சந்தை வீதி, வட்டாரம்–08

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-08,சத்தியக்காட்டுச்சந்தை வீதியிலுள்ள இல:69 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **ஆறுமுகம் கைம்பெண் செல்லம்மா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **ஆறுமுகம் பெண் வள்ளியம்மை** ஆகியவர் குறித்த ஆதனமானது தனது குடும்பத்தினரால் நீண்டகாலமாக எதுவித பிசகுமின்றி ஆட்சி செய்யப்பட்டு வந்ததெனவும் அதன் பின்னர் குறித்த ஆதனத்தை தான் ஆட்சி புரிந்து வருவதாகவும் தானே முழு ஆதனத்தினையும் தங்குதடையின்றி 40 வருடங்களுக்கு மேலாக ஆட்சிபுரிந்து ஆட்சியுரிமைச் சட்டத்தின் பிரகாரம் உரித்தினைப் பெற்றுவிட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இம்தியாஸ் முபராக் தாஹா முகதாவில் 241/12.11.1990 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தேவராசா பெண் அருமைநாயகி** ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1075/16.07.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த **ஆறுமுகம் கைம்பெண் வள்ளியம்மை** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **தேவராசா பெண் அருமைநாயகி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தேவராசா பெண் அருமைநாயகி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (3423)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

# கம்பன் விழா-2025

(யாழ்ப்பாணம்)



## காலை நிகழ்ச்சிகள்

திகதி :15.02.2025 சனிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி
இடம் :நல்லை ஆதீன கலா மண்டபம்

### திருநாள் மங்கலம்

மங்கல விளக்கேற்றல்: திரு.க.அருள்நேசன் (அதிபர், சிவகணேசன் புடவையகம்)
திரு.ச.சிவகுமார் (உரிமையாளர், சிவன் மோட்டர்ஸ்)
கடவுள் வாழ்த்து: செல்வி.தரங்கிணி பாலமுருகன்
தலைமையுரை: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா (முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலை)
தொடக்கவுரை: கௌரவ.சி.தவராசா (முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர், வடமாகாண சபை)

### விவாத அரங்கு

நடுவர்
முனைவர் பாரதி கிருஷ்ணகுமார்
பொருள்:
"கம்ப வருணனைகளுள் முதன்மை பெறுவது..?"

முல்லை நில வருணனையே! - பரா.ரமேஸ்
குறிஞ்சி நில வருணனையே! - கு.பாலசண்முகன்
மருத நில வருணனையே! - ந.ஐங்கரன்
நெய்தல் நில வருணனையே! - தெ.ஹர்சன்
பாலை நில வருணனையே! - இ.சர்வேஸ்வரா
நதிகளின் வருணனையே! - பரா.ரதீஸ்

## மாலை நிகழ்ச்சிகள்

திகதி :15.02.2025 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம் :நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

மங்கல இசை : திரு.ப.குமரன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.த.ஜெயசிலன் தம்பதியர் (பிரதேச செயலாளர், பச்சிலைப்பள்ளி)
திரு.த.முகுந்தன் தம்பதியர் (பிரதேச செயலாளர், கரைச்சி)
கடவுள் வாழ்த்து: திரு.ர.சுரசாகித்தியன்
தலைமையுரை: கௌரவ செல்வம் அடைக்கலநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்)
தொடக்கவுரை: கௌரவ சிவஞானம் சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்)

### தனியுரை

முனைவர் பாரதி கிருஷ்ணகுமார்
பொருள்:
"நயம்பட உரைத்த நா"

### பட்டிமண்டபம்

நடுவர்
'கம்பவாரிதி இ.ஜெயராஜ்
பொருள்
"இடித்துரைக்கும் ஆற்றலில் இணையற்று நின்றவர்..."

வீடணனே! - ந.விஜயசுந்தரம், பரா.ரதீஸ்
இலக்குவனே! - ஆறு.திருமுருகன், அ.வாசுதேவா
கும்பகர்ணனே! - ஸ்ரீ.பிரசாந்தன், ச.லலிசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிவேணி சங்கமத்தில்

# புனித நீராட குவிந்த பக்தர்கள்



(டில்லி)

திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை பிரயாக் ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா வில் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர்.

2025 மகா கும்பமேளா நிகழ்வு தொடங்கியதில் இருந்து 491.4 மில்லியனுக்கும் அதிகமான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் (கங்கை, யமுனை மற்றும் புராண சரஸ் வதியின் சங்கமம்) நீராடியுள் ளதாக உத்தரப்பிரதேச அரசாங் கத்தின் தகவல்கள் தெரி விக்கின்றன.

நேற்று முன்தினம் 8 மணி நிலவரப்படி கிட்டத் தட்ட 8.54 மில்லியன் மக் கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாத்திரம் புனித நீராடியுள்ளனர் என்று உத்தரப்பிரதேச அரசாங்கத் தின் தகவல் துறை சுட்டிக்காட் டியுள்ளது.

கடந்த ஜனவரி மாத பௌர்ணமியில் தொடங்கிய மகா கும்பமேளா நிகழ்வு உல கெங்கிலும் உள்ள பக்தர் களை ஈர்க்கும் மிகப் பெரிய ஆன்மீக மற்றும் கலாசார விடயமாக பார்க்கப்படுகி றது.

பிரமாண்டமான நிகழ்வு பெப்ரவரி 26 ஆம் திகதி மகாசிவராத்திரி வரை தொட ரும். (நி-8)

# ரஷ்யா – உக்ரைன்

# இந்தியா நடுநிலை

## வெள்ளை மாளிகையில் வைத்து உறுதி

(வோஷிங்டன்)

**ரஷ்யா-உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநி வகிக்கவில்லை. இந்தியா எப்போதும் அமைதி பக்கமே நிற்கும் என இந்தியப் பிரதமர் நரேந்திர தெரிவித்தார்.**

அமெரிக்காவுக்கு உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டுள்ள இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வியாழக் கிழமை வெள்ளை மாளி கையில் ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்புடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தி னார்.

அதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியா உட்பட அனை த்து நாடுகளுக்கும் பரஸ்பர வரி விதிப்புகளை டொனா ல்ட் ட்ரம்ப் அறிவித்த சில மணி நேரங்களில் இந்த சந்திப்பு நடந்தது.

இது போர்க்காலம் அல்ல நாங்கள் போரை முடிவுக்கு கொண்டு வரவே விரும்புகிறோம் எனத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே ஒற்றுமை மற்றும் சிறந்த ஒத்து ழைப்பிற்கு அழைப்பு விடுத்த பிரதமர், "அமெரிக்கா உலகின் பழைமையான ஜனநாயகம், இந் தியா உலகின் மிகப்பெரிய ஜன நாயகம்.

எனவே இந்தியாவும் அமெ

# இந்தியாவிற்கு நவீன போர் விமானங்கள்

# விற்பனை செய்ய அமெரிக்கா இணக்கம்

(வோஷிங்டன்)

இந்தியாவிற்கு நவீன போர் விமானங்களை விற் பனை செய்ய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விருப்பம் தெரிவித் துள்ளதாக வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.



இந்தியப் பிரதமர் நரே ந்திர மோடியின் அமெரி க்கப் பயணத்தின் போது இவ்விடயம் தொடர்பான ஒப்பந்தங்கள் எட்டப்பட் டதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேலும் வலுப்படுத்துவது தொடர் பாக இதன்போது கலந் துரையாடப்பட்டது.

டொனால்ட் ட்ரம்ப் மீண் டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் னர், வெள்ளை மாளி கைக்குச் சென்ற நான் காவது உலகத் தலை வர் இந்தியப் பிரதமர் ஆவார்.

இதன்போது பிரதமர் மோடி தனது சிறப்பு நண்பர் என்று கூறிய ட்ரம்ப், அவர் தன்னை விட மிகச் சிறந்த பேச்சா ளர் எனவும், வளர்ந்து வரும் சீனாவை எதிர் கொள்ளும் போது ஒத்த எண்ணங்களைக்கொண்ட நட்பு நாடாக இந்தியாவைப் பார்ப்பதாகவும் அவர் தெரி வித்தார்.

மேலும் அமெரிக்கா வின் உயர்மட்ட இரா ணுவப் பரிசுகளில் ஒன் றான F-35 என்ற போர் விமானத்தை இந்தியா விற்கு விற்பனை செய் யத் தயாராக இருப்ப தாகவும் ட்ரம்ப் தெரிவித் தார். (நி-8)

# கனடாவில் கடும் பனிப்பொழிவு பாடசாலைகளுக்கு விடுமுறை

(ஒட்டாவா)

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் கடந்த சில நாட்க ளாகக் காணப்படும் கடுமை யான பனிப்பொழிவு கார ணமாக அங்குள்ள பாட சாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ரொற ன்ரோ, பீல் ஹால்டன், யோர்க், டர்ஹம், ஹமில் டன், நயகரா,மோன் அவ னியர், மற்றும் சிம்கோ உள்ளிட்ட பல்வேறு பகுதிக ளின் பாடசாலைகள் மூடப் படுவதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

மேலும் பல்கலைக்கழகங்க ளும் மூடப்படுவதாகவும் பாட சாலைப் போக்குவரத்து சேவைகள் இரத்து செய்யப்படுவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடுமையான பனிப்பொழிவு காரணமாக அப் பகுதியில் பல்வேறு வாகன விபத் துக்கள் பதிவாகியுள்ளது.

எனவே வாகனங்களை மெது வாகச் செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங் கியுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் விவகாரத்தில் ...லை வகிக்கவில்லை

## ...உறுதிபடத் தெரிவித்தார் பிரதமர் மோடி

...ா நடுநிலை
...மைதியின்
...ந்திர மோடி



...றாம் ...யே ...ஒத்து ...ந்த ...கின் ...இந் ...ஜன ...அமெ

ரிக்காவும் ஒன்றிணைவது மனித குலத்திற்கே நலன் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகத்தில் கவனம் செலுத்துவோம் என்று கூறிய மோடி, அணுசக்தியில் அதிக முதலீடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகப் பற்றாக்குறையை குறைக்கும் வகையில், அமெரிக்க எண்ணெய் மற்றும் எரிவாயுவை அதிக அளவில் டில்லிக்கு இறக்குமதி செய்ய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒப்பந்தம் செய்துள்ளார்.

மேலும் வர்த்தகம், இறக்குமதி மீதான வரிகள், எரிசக்தி, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்ப கூட்டாண்மை மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்து இருதலைவர்களும் விவாதித்தனர். (நி-8)

# ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை நிச்சயம் மீட்போம்

## நேட்டோவிடம் உறுதியளித்த உக்ரைன்



(கீவ்)

ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை தாம் நிச்சயம் மீட்போம் என நேட்டோ இராணுவக் கூட்டமைப்பிடம் உக்ரைன் உறுதியளித்துள்ளது.

ரஷ்யா கைப்பற்றிய பகுதிகளை உக்ரைனால் இனி திரும்பப் பெற முடியாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அண்மையில் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக் செத் கூறிய கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்து.

இந்நிலையில் குறித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ருஸ்தம் உமெ ரொவ், நேட்டோ தலைவர் மார்க் ரூட்டை நேட்டோ தலைமையகத்தில் அண்மையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது உக்ரைனுக்கு நேட்டோ அமைப்புத் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி.

அனைத்து நட்பு நாடுகளும் தங்களுக்கு ஆதரவு அளிக்கின்றன. அமெரிக்காவும் தம்முடன் தான் உள்ளது.

எனவே உக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

...வு ...ற ...டுள் ...ங்க ...பாட ...வகள் ...தெரி ...யான ...அப் ...விபத் ...மெது ...ஸார் ...வழங் ...த்தக் ...நி-8)

### ஜேர்மனியில்

# பொதுமக்கள் மீது காரால் மோதிய புகலிடக் கோரிக்கையாளர்

## 30 பேர் காயம்



(பேர்லின்)

ஜேர்மனியின் மியுனிச் நகரில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த புகலிடக்கோரிக்கையாளர் ஒருவர் பொதுமக்கள் மீது காரை மோதி மேற்கொண்ட தாக்குதலில் 30 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஜேர்மனியில் அடுத்தவாரம் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு மாநாட்டிற்காக அமெரிக்க துணை ஜனாதிபதி உக்ரைன் ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்கள் வருகை தருவதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்னதாக இந்தத் தாக்குதல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களிற்கு பாதுகாப்பளித்துக்கொண்டிருந்த பொலிஸாரை நோக்கிச் சென்ற வெள்ளைக் கார் பின்னர் வேகமாகச் சென்று பொதுமக்கள் மீது மோதியுள்ளது. இது தொடர்பில் 24 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-8)

# பத்து ஆண்டுகளுக்குள் பூமியைத் தாக்கவுள்ள சிறுகோள்


புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிறுகோள் ஒன்று அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் பூமியைத்தாக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

2024 YR4 என்று பெயரிடப்பட்டுள்ள சிறுகோள் கடந்த டிசம்பரில் சிலியின் ரியோ ஹர்டா டோவில்மேம்பட்ட தொலைநோக்கிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பூமியைத் தாக்கும் எச்சரிக்கைகளை தூண்டியது.

அப்போதிருந்து, சிறுகோள் ஆபத்து பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இது தற்சமயம் நமது கிரகத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளது.

2032 ஆம் ஆண்டில் பூமி மீதான இதன் தாக்கத்தின் வாய்ப்பு கடந்த



ஜனவரியில் 1.2% ஆக இருந்ததாகவும் இப்போது அது சுமார் 2.3% ஆக உள்ளதாகவும் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தாக்கம் சாத்தியமானால், அது 22 டிசம்பர் 2032 அன்று சரியாக மதியம் 2.02 மணிக்கு பூமியுடன் மோதும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

துல்லியமான நேரம் பூமியுடன் மோதுவதற்கான சரியான நிகழ்தகவைப் போலவே மாற வாய்ப்புள்ளது.

இந்தச்சிறுகோள் கிழக்கு பசுபிக் பெருங்கடல், வடக்குத் தென் அமெரிக்கா, அட்லாண்டிக் பெருங்கடல், ஆபிரிக்கா, அரபிக் கடல் அல்லது தெற்காசியாவில் எங்காவது தாக்கக் கூடும் என்று நாசா கூறுகிறது.

2024 YR4 சிறுகோள் 40மீ முதல் 90 மீ வரை அகலம் அல்லது 130 அடி முதல் 300 அடி வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு அலுவலகத்திற்கு

## திடீர் விஜயம் செய்த ஜூலி சங்



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் கட்சி அலுவலகத்திற்கு சென்ற அமெரிக்கத் தூதுவர், ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக அங்கு இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுன அலுவலகத்திற்கு வருகை தருமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைவாக அவர் அங்கு சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கத் தூதுவருடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, சி.பி. ரத்நாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக்க ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதனிடையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 700 | 800 | 700 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 1000 | 1200 |
| தக்காளி | 150 | 180 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 200 |
| கோவா | 350 | 400 | 250 | 400 |
| கரட் | 650 | 800 | 800 | 1000 |
| பூசணி | 120 | 140 | 150 | 200 |
| புடோல் | 200 | 280 | 200 | 400 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 600 | 600 |
| வெண்டக்காய் | 350 | 450 | 300 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 700 | 700 | 800 | 700 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 500 |
| பீற்றூட் | 350 | 300 | 250 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 1000 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | 3000 | 1000 | 2400 |
| போஞ்சி | 400 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 600 | 700 | 600 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 150 | 130 |
| தேசிக்காய் | 300 | 250 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 200 | 250 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 500 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 200 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 150 |

# இன்று ஒரு தகவல் 322

பகுதி-02 தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## விடியல் நேரம்

ஒருவர் வந்தார். வாங்க சேர்! உட்காருங்கள் என்றேன். புது வருடம் பிறந்திருக்கிறது. அதுதான் பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டு போகலாம் என்று வந்தேன் என்றார். மிகவும் சந்தோசம் என்றேன்.

போன வருட கஷ்டம் எல்லாம் போன வருடத்துடன் போகட்டும்! இந்த வருடம் நல்ல விதமாக அமையட்டும்! இது நமக்கு எல்லா சௌகரியங்களையும் கொடுக்கட்டும்! என்றார். ஒவ்வொரு வருடமும் நாம் இப்படியேதான் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு நாளும் புதுசு புதுசாகத்தான் விடிந்துகொண்டு இருக்கிறது. வரும்போது வெளிச்சம். போகும்போது இருட்டு!

அது சரி உண்மையான விடியல் என்றால் என்ன?

இதே கேள்வியை ஒரு துறவி தன்னிடம் இருந்த சீடர்களைப் பார்த்து கேட்டார். உங்களாலே துல்லியமாகச் சொல்ல முடியுமா? என்று அவர் கேட்டார்.சீடர்கள் எல்லாம் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு சீடன் எழுந்து நான் சொல்கிறேன் என்றான். சொல்லு என்றார்.

தொலைவிலே வரக்கூடிய ஒரு மிருகம் ஆடா அல்லது மாடா என்று இனம் கண்டு கொள்கிற நேரம் இருக்கிறது பாருங்கள் அது தான் விடியல் நேரம்! என்று விளக்கம் கொடுத்தான் அவன்.

அது சரியான பதில் இல்லை! விடியல் நேரம் அது இல்லை என்று சொல்லிவிட்டார் அந்தத் துறவி.

இன்னொரு சீடன் எழுந்து நான் அதற்குப் பதில் சொல்கிறேன் என்றான். சொல்லு என்றார் துறவி.

ஒரு மரம் இருக்கிறது அது ஆலமரமா? அல்லது அரச மரமா? என்று அடையாளம் காணக்கூடிய நேரம் இருக்கிறது பாருங்கள். அதுதான் விடியல் நேரம் என்றார்.

அதுவும் சரியான பதில் இல்லை! என்று சொல்லி விட்டார் துறவி. அதன்பின் எந்தச் சீடரும் எழுந்திருக்கவில்லை.

இதற்கு மேல் நாம் விளக்கம் கொடுத்துக்கொண்டு இருந்தோம் என்றால் நம்முடைய அசட்டுத் தனமும்தான் வெளியே தெரிந்து விடும் என்று புரிந்துகொண்டார்கள். அதனால் பேசாமல் இருந்து விட்டார்கள்.

சுவாமி! நீங்களே சரியான பதிலைச் சொல்லிவிடுங்கள்... உண்மையிலேயே விடியல் நேரம் எது என்று கேட்டார்கள்.

இப்போது அந்தத் துறவி பதில் சொன்னார்.

நம்முடைய உதவியை நாடி வருகிற ஒரு ஆண் நம்முடைய சகோதரன் என்றும் அது மாதிரியே வரக்கூடிய ஒரு பெண் நம்முடைய சகோதரி என்றும் நினைக்கக்கூடிய ஒரு நேரம் இருக்கும் பாருங்கள்... அது தான் விடியல் நேரம் என்று விளக்கம் கொடுத்தார் அந்தத் துறவி.

இந்தப் பெரியவர் சொல்லும் அடிப்படையிலே யோசித்துப் பார்த்தால் இன்னும் நமக்கு விடிவு காலம், விடியல் நேரம் வந்ததாகத் தெரியவில்லையே! தினமும் பத்திரிகையைப் பாருங்கள்.

அடுத்தவர்களைச் சகோதரியாகவும் – சகோதரனாகவும் நினைக்கும் சகோதரர்களையா இந்தக் காலத்திலே பார்க்க முடியுது? அடித்து விரட்டுவதும், நீ வேறு, நான் வேறு என்ற நினைப்பும் தானே இப்போது அதிகமாக இருக்கிறது.

அப்படி இருக்கும் போது புதுவருடம் பிறந்து தூங்குவதும், புது வெளிச்சம் கொடுத்துவிட்டு தூங்குவதும் பொய் தானே. ஒருத்தருக்கொருத்தர் வாழ்த்துத் தெரிவிப்பது கூட எவ்வளவு பெரிய பித்தலாட்டம் தெரியுமா?

ஒருவர் வந்தார் சேர்! இன்னொருத்தரைப் பார்த்துக் கேட்டார். நான் புத்தாண்டு வாழ்த்துமடல் அனுப்பினேனே அது உங்களுக்குக் கிடைத்ததா? என்றார். ஆம்! கிடைத்தது. நானும் நன்றி கூறி மடல் அனுப்பினேனே என்றார் இவர்.

ஏன் சேர் பொய் சொல்கிறீர்கள்.

நான் உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்து அனுப்பவே இல்லையே சும்மா சொல்லிப்பார்த்தேன் உடனே கிடைத்தது என்று அடித்து விடுகிறீர்கள் என்றார் அவர்.

அதற்கு இவர். ஏன் சேர்..? புத்தாண்டு வாழ்த்து மடல் அனுப்பியதாக நீங்கள் பொய் சொல்கிறீர்கள்.

அப்படி இருக்கும்போது அது கிடைத்ததாக நான் பொய் சொல்லக்கூடாதா என்றார். இவர்களுக்கெல்லாம் எப்போது சேர் விடியல்வரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான உணவு வழங்கும் திட்ட மீளாய்வு

(கிளிநொச்சி)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டத்தில் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

பாடசாலைகளுக்கான மதிய உணவு வழங்கல் திட்டத்துக்கு, மரக்கறிகளை வழங்குவதற்காக விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விவசாய உபகரணங்கள், விதைகள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

அதேபோன்று முட்டைகள் வழங்குவதற்காக பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கோழிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் திட்டம் தொடர்பில் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் எத்தனை பாடசாலைகளில், எத்தனை மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படுகின்றது?, தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் மற்றும் பயனாளர்கள் எண்ணிக்கை தொடர்பிலும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு கோழிகள் வழங்கப்பட்ட நிலையில் அதனை அவர் விற்பனை செய்துள்ளமையும் இந்தக் கலந்துரையாடலின்போது கண்டறியப்பட்டது. இதனையடுத்து ஆளுநர் மேற்படி பயனாளிக்கு வழங்கப்பட்ட கோழிக்கூடு உள்ளிட்ட ஏனையவற்றை மீளப்பெறுமாறு பணித்ததுடன் இவ்வாறு திட்டத்தின் நோக்கத்துக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி, கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக்டிறஞ்சன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பணிப்பாளர் மற்றும் மாவட்ட பிரதிப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (6-8)

# 10 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம்




(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து நீதி கிடைக்கும் வரை சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளார்.

அழகரெத்தினம் வனகுலராசா என்னும் ஒரு காலினை இழந்த முன்னாள் போராளி ஒருவரே முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர் மற்றும் உணவு இல்லாமல், நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அவர் 10 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து இலங்கை மற்றும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். (6-8-299)



# எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... சோழியபுரம் பத்ம வெளியீடு

தானாக வந்த கதிர்காமக் கந்தன் மலையிலே எழுந்தருளிய தினமாகிய தைப்பூச நன்னாளிலே வடகதிர்காமக் கந்தனின் அருள் வேண்டி விசேட அபிஷேக பூஜைகள் ஆராதனைகள் நடைபெற்றன. சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரின் அனுக்கிரகத்துடன் வடகதிர்காமக் கந்தனின் அருளும் சேர்ந்து அண்ணனும் தம்பியுமாக எங்கள் துன்பங்களைப் போக்கி இன்பமாக வாழ அருள் பாலிக்கட்டும்.

என் இனிய நெஞ்சங்களே!

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. இப்போது பாருங்கள் எங்கு பார்த்தாலும் கோவில்கள் மட்டுமல்ல அதன் அழகுகளும் கண்கொள்ளக் காட்சிகளாகும். இவையெல்லாம் பழமொழிகள் ஒவ்வொன்றும் பொய்யா மொழிகள் என்பதற்கு அடையாளமாகும். ஒரு ஊர் சிறப்புற்று விளங்குவதற்கு அங்கு விளங்கும் கோவில்களோடு அவ்வூர் மக்களும் காரணமாகும்.

**கோவில்கள் எதற்கு,**

சதா அலைந்து திரிந்து கொண்டிருக்கும் மனதை தீய வழியில் செல்ல விடாது. நல்வழியில் செலுத்துவதே அறிவு. உயிர் வாழ்வதற்கு இறைவழிபாடு அவசியம். மனதை அலைய விடாமல் கட்டுப்படுத்தி பயபக்தியுடன் வழிபாடு செய்வதற்காக அமையப்பெற்றவையே கோவில்கள் ஆகும். இறைவன் இருக்கின்றான் என்பதைக் காட்டவும் தெய்வீக சக்தியை வகைப்படுத்திக் காட்டவும் சமூதாயத்தை ஆட்கொள்ளும் சக்தியைத் தேக்கி வைக்கும் ஒரு பீடம் தான் கோவில்கள் ஆகும். மக்கள் எல்லோரும் தங்கள் அன்றாட வாழ்க்கையைக் கோவில்களுடன் இணைத்துத்தான் வாழ்ந்து வந்துள்ளனர். அதாவது அதிகாலையில் கோவில்களில் கணீர் என ஒலிக்கும் மணியோசை துயில் கொள்ளும் மக்களை எழுப்புகின்றது. பூஜைகள் இறைவனை வணங்க வைக்கின்றன.

கல்தான் முதலில் தோன்றியது என்பதால் கல்லில் விக்கிரகங்கள் வடிக்கப்பட்டன. ஈர்ப்பு சக்தி, உயிர்ப்பு சக்தி, கவரும் சக்தி ஆகிய மூன்றையும் மூர்த்தி வடிவில் பெற்றுக் கல் தெய்வமாகின்றது. கோபுரத்தைத் தரிசிப்பது இறைவனை வணங்கும் பலனைத் தரும். அதாவது கோபுரம் இறைவனின் திருவடியைக் குறிப்பதாகும். கோவில் முகப்புக்களில் அமைக்கப்படும் ராஜகோபுரம் மக்களைக் கவரும் வகையில் அமைக்கப்பெற்று பெயருக்கேற்றால் போல் ஒரு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும். பிற எண்ணங்களையும் காரியங்களையும் தள்ளி வைத்து விட்டு இறைவனை நாடிப் போவதை உணர்த்துவது தான் கோபுர வாயிலகள். இறைவன் முன் எல்லோரும் சமம் என்ற உயர்ந்த நெறியை நிலைநாட்டத்தான் திருவிழாக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

எந்தப் பெரிய கோயில்களாக இருந்தாலும் எந்தத் தெய்வத்துக்குரிய கோவிலாக இருந்தாலும் முதற் பூஜை விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகனுக்கே. விநாயகனே வினை தீர்ப்பவனே என்று வேண்டி நிற்க எல்லா வினைகளும் எம்மை விட்டு அகன்று விடும்.

வக்ரதுண்ட மஹாகாய சூர்யகோடி சமப்ரபா நிர்விக்னம் குருமேதேவா சர்வ கார்யேசு சர்வதா என்பது சுலோகம். இதன் விளக்கம்: உடைந்த கொம்மையுடைய பெரிய உடம்புடன் கூடிய பல கோடி சூரியப் பிரகாசமுடைய இறைவனே! என்னுடைய எல்லாக் காரியங்களிலும் எப்போதும் எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாது இருக்க நீ அருள் புரிய வேண்டும் என்பதாகும்.

**கண்திருஷ்டி விநாயகர்**

ஒவ்வொரு வீட்டிலும் அலுவலகத்திலும் தொழிற்சாலைகளிலும் கண்திருஷ்டி விநாயகர் படம் வைப்பது நன்மையைத் தரும். எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும் அதை வெற்றியுடன் நடாத்த விநாயகனின் அருள் அவசியமானது. இதனை வீட்டில் வைப்பதன் மூலம் எல்லாத் துறைகளிலும் சிறந்த முன்னேற்றமும் மேன்மையும் அடையலாம். அமைதியான மண வாழ்க்கையும் அமையும். எனவே கண்திருஷ்டி விநாயகர் படத்தை வீட்டிலும் அலுவலகத்திலும் கட்டாயம் வைத்திருங்கள்.

**ஓம் என்பதின் அர்த்தம்**

ஓம் என்பது சுற்றிக் கொண்டேயிருக்கும் பூமி கடவுளின் சங்கீத சுருதியுடன் சேர்ந்த ஒலி. இந்த ஓம் என்ற சொல் மனதை ஒருமுகப்படுத்தும் வித்தையைச் செய்கின்றது.ஓம் என்ற நாதத்தில் விநாயகர் முழுமையாக இருக்கின்றார். ஓம் என்பது ஆத்மாவின் இருப்பிடமான இதயத்திலிருந்து 108 நாடிகளை இயக்குகிறது. உற்றுப் பாருங்கள் இதயமே ஓ வடிவத்தில் அமைந்திருக்கின்றது.

**தர்ப்பையின் மகிமை**

பொதுவாக எல்லா சுப மற்றும் அசுப சடங்குகளின் போதும் தர்ப்பைப் புல்லை பயன்படுத்துகின்றார்கள். இந்தத் தர்ப்பையை சிருஷ்டித்தவர் விநாயகப் பெருமான் என்பது வேத இதிகாச நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. விதை இல்லாமல் முளைக்கும் ஒரே ஒரு தாவரம் தர்ப்பைப் புல் தான். நாம் எங்கிருந்து வந்தவர்கள், நமது இனத்தின் ஆணும் பெண்ணும் உருவானது எப்படி என்று இதுவரை யாருக்கும் தெரியாது. இந்த மனித வாழ்க்கையின் சூட்சுமத்தை உணர்த்தவே தற்பையை பயன்படுத்துகின்றோம்.

**நாம் கட்டாயம் செய்ய வேண்டியவை**

எந்த ஒரு காரியத்தைத் தொடங்கும் போதும் முதலில் விநாயகரையும் அடுத்து குல தெய்வத்தையும் நம் வீட்டில் இஷ்ட தெய்வமாக வணங்கும் கடவுளையும் வணங்க வேண்டும். எடுக்கும் காரியங்கள் வெற்றியாக அமையும். அடுத்து தாய் தந்தையரின் ஆசிர்வாதம் பெறவேண்டும். தாய் தந்தையர்களை இழந்தவர்கள் அவர்களை நினைத்து வணங்க வேண்டும். இவைகள் தான் எங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கும் செயற்பாடுகள் ஆகும். எனவே தவறாது கடைப்பிடியுங்கள் வெற்றி நிச்சயம்.

**ஆன்மீக உணர்வு எப்படித் தோன்றுகிறது?**

இறைவன் நம் உடம்பில் ஆன்மாவை மறைத்து வைத்துள்ளார். மறைந்திருக்கும் அதை விசாரித்தால் அந்த உணர்வே ஆன்மீக உணர்வாகி விடும். இதற்காகத்தான் இறைவன் ஆன்மாவை மறைத்தே வைத்தார். இந்த உள்ளுணர்வை அடிக்கடி உணர்வதால் கோயில் சந்நிதானத்தில், தீப ஆராதனை திளைப்பதால், பஜனை செய்து பூரிப்பதால் இந்த உள்ளுணர்வு திரளும்! வலிமை பெறும். நமக்குள் பரவும். இது நமக்குக் கடவுள் தந்த ஒரு 'டோக்கன்' வரப் பிரசாதம். இந்த முயற்சியை அடிக்கடி மேற்கொள்ளுவதால் கடவுளை அடையும் முயற்சியில் நாம் பாதித்தூரம் முன்னேறுகின்றோம். அடுத்து வாழ்க்கையென்றால் போராடும் போர்க்களமே என்றவாறு இப்போது எல்லோரும் நோய்களோடு போராடிக் கொண்டு இருக்கின்றார்கள். யாவற்றையும் போக்க இறை வழிபாடு அவசியம் எனவே தினமும் இறைவனை வழிபட்டு எங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கி வாழ்வோமாக.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீக வாதியும் ஓய்வுநிலை ஆசிரியரும்,**
**பரம்பரைப் பரிபாலகரும்)**

(15.02.2025) (3421)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 703





நீ பயப்படாமல் சும்மா இரு! என்றாள் குந்தவை. படகு நெருங்கி வந்து கொண்டிருந்தது. யானைத் துதிக்கையில் அகப்பட்ட வானதி எப்படி உயிர் பிழைத்தாள்? இத் குறித்து அவள் இரண்டாவதாகச் செய்த ஊகந்தான் சரியானது. யானை துதிக்கையைச் சுழற்றி அவளைத் தூர எறியவில்லை. மேலே தூக்கி அம்பாரியின் அருகில் இலேசாக வைத்தது.

அங்கே திரை மறைவில் ஆயத்தமாயிருந்த குந்தவை அவளை வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டாள்.

பிறகு முதன் மந்திரியும் பல்லக்கில் ஏறினார். "தேவி போய் வரட்டுமா? உன் பிரயாணம் இனிதாயிருக்கட்டும். அதன் முடிவும் இனிதாயிருக்கட்டும்!" என்று சொன்னார். "ஐயா! தங்கள் உதவிக்கு மிக்க நன்றி!" என்றாள் இளைய பிராட்டி.

"கொடும்பாளூர்க் கோமகளைக் கோழை என்றாயே? அவளைப்போல் நெஞ்சழுத்தக்காரப் பெண்ணை நான் பார்த்ததேயில்லை."

முன்னேயெல்லாம் அவள் கோழையாகத் தானிருந்தாள். கொஞ்ச நாளாகத்தான் அவளுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்கிறது என்றாள் குந்தவை.

எல்லாம் உன்னுடைய பயிற்சிதான். அந்தப் பெண் என்னைப் பயங்கர ராட்சதன் என்று எண்ணியிருப்பாள் போனால் போகட்டும். என்னைப் பற்றி எவ்வளவோ பேர் எத்தனையோ விதமாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். நான் அதற்காகவெல்லாம் கவலைப்படுவதில்லை போய் வாருங்கள் அம்மா!

இவ்விதம் முதன் மந்திரி கூறியதும், அவருடைய பல்லக்கும் நாலு வீரர்களும் மட்டும் மேற்குத் திசையில் செல்ல, யானை, குதிரை பரிவாரங்கள் எல்லாம் கிழக்கு நோக்கிச் சென்றன.

முதன் மந்திரி பல்லக்குப் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் மழை பிடித்துக் கொண்டது. மழையைப் பொருட்படுத்தாமல் சிவிகை தூக்கிய ஆட்களும், சிவிகையைக் காத்த வீரர்களும் சென்று கொண்டிருந்தார்கள். மழை குறைந்து தூறல் நிற்கும் சமயத்தில் திடீரென்று பல்லக்கு நின்றது. "ஏன் நிற்கிறீர்கள்?" என்று முதன் மந்திரி கேட்டார். "சுவாமி, அந்த மரத்தடியில் யாரோ கிடப்பது போலத் தெரிந்தது!" என்றான் முன்னால் சென்ற காவலர்களில் ஒருவன்.

முதன் மந்திரி அவன் சுட்டிக்காட்டிய திசையை உற்றுப் பார்த்தார். பளிச்சென்று ஒரு மின்னல் மின்னியது.

ஆமாம், யாரோ கிடக்கிறதாகத்தான் தெரிகிறது, இறங்கிப் பார்க்கிறேன்" என்றான் முதன் மந்திரி.

சிவிகையிலிருந்து இறங்கி அருகில் சென்றபோது மரத்தடியில் கிடந்த மனிதன் முனகும் சத்தம் கேட்டது. "யார் இங்கே!" என்றார் அநிருத்தர்.

அதற்குப்பதிலாக, "முதன் மந்திரி போலிருக்கிறதே!" என்ற தீனமான குரல் கேட்டது. "ஆம்" கேட்டது முதன் மந்திரிதான்! "இங்கே கிடப்பது யார்?" "ஐயா! தெரியவில்லையா? நான் தான் மதுராந்தகன்!"

"இளவரசே! இது என்ன கோலம்? இங்கே எப்படி வந்தீர்கள்? என்ன நேர்ந்தது?" என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டே முதன் மந்திரி மதுராந்தகரைத் தூக்கி நிறுத்த முயன்றார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆணவத்தின் முடிவு அவமானம்



(நேற்றையதொடர்ச்சி...)

சூரியன் கீழே குனிந்து பார்த்தது. பூமியில் ஒரு மனிதன் சாலையில் போய்க் கொண்டிருந்தான். மிகவும் குளிராக இருந்ததால் அவன் தன் மேலங்கியைக் கழற்றித் தன்னைச் சுற்றி இறுக்கி போர்த்திக் கொண்டான்.

சூரியனுக்கு ஓர் எண்ணம் உதித்தது வாடைக் காற்றிடம் சொல்லிற்று, "கீழே சாலையில் நடந்து செல்லும் அந்த மனிதனைப் பார். அங்கு நீ மிகவும் குளிர்ச்சியாக செய்திருப்பதால் அவன் தன்னுடைய மேலங்கியை இழுத்துப் போர்த்திக் கொண்டிருக்கிறான். உன்னுடைய வலிமையை நீ உபயோகி மேலங்கியை அவன் எடுத்துவிட்டால் நீ தான் மிகவும் வலிமையானவன் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன் என்றது.

இது மிகவும் எளிமையான பணி என்று வாடைக்காற்று எண்ணியதால் சவாலை ஏற்றுக் கொண்டது. காற்று வேகமாக வீசிற்று. சாலையில் அந்த மனிதன் இருந்த இடத்தில் இன்னும் அதிகவேகமாக வீசிற்று. மேலங்கியை அவன் கழற்றவில்லை.

ஆனால், காற்று வேகமாக, வலுவாக வீச, வீச, குளிர் தாங்காமல் அந்த மனிதன் தன் மேலங்கியை இன்னும் இறுக்கமாக பிடித்துக் கொண்டான். வாடைக் காற்றால் சவாலில் வெற்றி பெற முடியவில்லை. சூரியனை முயற்சி செய்யுமாறு காற்று கேட்டுக் கொண்டது.

சூரியன் மிகவும் பிரகாசமாக வெளியே வந்தது. திடீரென்று வெப்ப மாக இருப்பதை உணர்ந்த அந்த மனிதன், "என்ன வேடிக்கை! சற்று முன் கடுங் குளிராக இருந்தது. இப்போது வெப்பமாக இருக்கிறதே," என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். சூரியன் மேலும் வெப்பத்தை அதிகரித்தது. அவன் மேலும் வெப்பம் பரவுவதை உணர்ந்தான்.

சகிக்க முடியாத வெப்பத்தால் தன் மேலங்கியைக் கழற்றினான் தலையை மூடிக் கொண்டான். இன்னமும் வெப்பம் அதிகரிக்கவே, தன்னுடைய மேலங்கியை எடுத்துவிட்டு அங்கிருந்த குளத்திற்குள் குதித்து விட்டான்.

இவற்றையெல்லாம் பார்த்த காற்று அவமானமடைந்தது. தன் தோல்வியை ஒப்புக் கொண்டது. அதன் பிறகு வாடைக் காற்று கர்வத்தை விட்டொழித்தது. தன்னுடைய கடமையைத் தவறாமல் செய்து வந்தது.

நீதி : தற்பெருமை அவமானத்தை ஏற்படுத்தும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சியே, அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷமாகும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப்பிரச்சினை பற்றி பேசாதிருப்பீராயின்...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வல்வெட்டித்துறைக்குச் சென்றபோது, அங்கு தாயொருவர் ஜனாதிபதி அநுரவை ஆரத் தழுவிய சம்பவம் மிகுந்த நெகிழ்ச்சியைத் தந்தது.

வல்வெட்டித்துறை என்பது தலைவர் பிரபாகரன் பிறந்த மண்.

யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வருகின்ற சிங்கள மக்கள் தலைவர் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறைக்குச் செல்வதை பிரதான விடயமாகக் கொண்டிருப்பர்.

அதுதவிர, தலைவர் பிரபாகரன் பிறந்து வளர்ந்த வீட்டில் இருந்து மண்ணை எடுத்துச் செல்கின்ற சம்பவங்களும் நடந்துள்ளன.

ஆக, தலைவர் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறைக்கு சிங்கள மக்கள் தங்களின் பெறுமதியான மதிப்பைச் செலுத்தி வருகின்றனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வல்வெட்டித்துறைக்குச் சென்றபோது தாயொருவர் ஜனாதிபதி அநுரவை ஆரத்தழுவியதற்குள் மிகுந்த பொருள்கோடல் உண்டு.

ஆம், நீங்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்று தலைவர் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை மண்ணுக்கு வந்திருக்கிறீர்கள். உங்களை நாங்கள் நம்புகின்றோம்.

சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. அந்த உடன்பாடு என்பது இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு எத்தகைய உரிமையும் ஆட்சி அதிகாரமும் உண்டோ அந்த உரிமையும் அதிகாரமும் தமிழ் மக்களாகிய எமக்கும் வேண்டும்.

அந்த உரிமையை நீங்கள் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஏனெனில் நீங்கள் ஆற்றுகின்ற உரைகளில் இன, மத, மொழி பேதங்களுக்கு இங்கு இம்மியும் இடமில்லை எனப் பல தடவைகள் கூறியுள்ளீர்கள்.

அதுதவிர, தலைவர் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை மண்ணுக்குத் தாங்கள் வந்திருப்பதன் மூலம் தங்களின் சமாதான நோக்கு புலப்படுகிறது என்பதாக அந்தப் பொருள் கோடல் அமையும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூறியாக வேண்டும். அதாவது உங்கள் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை என்பது உங்களின் கைகளிலேயே உள்ளது.

ஆம், நாட்டை அபிவிருத்தி செய்வது தொடர்பில் நீங்கள் கொண்டுள்ள கருசனைக்கு மேலாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் உங்களின் அக்கறையும் ஈடுபாடும் மிகுந்திருக்க வேண்டும்.

அது உங்கள் மீதான நம்பிக்கையை வளர்த்தெடுக்கும்.

எனினும் உங்களின் அரசியல் பயணத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் அமிழ்ந்திருப்பதுபோல் தெரிகிறது.

உண்மையில் இனப்பிரச்சினை பற்றி நீங்கள் பேசாதிருப்பீர்களாயின், அது மிகப்பாரதூரமான எதிர்விளைவை தமிழர் பகுதியில் ஏற்படுத்தும் என்பது சர்வநிச்சயம்.

## அமைச்சுசார் ஆலோசனைக்குழு
## உள்ளூராட்சி சட்டமூலத்துக்கு அனுமதி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்திற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச்.அபயரத்ன அவர்கள் தலைமையில் நேற்று பாராளுமன்றத்தில் கூடிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ் அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் இங்கு ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதியமைச்சர் ருவன் செனரத் உள்ளிட்ட பிரதியமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## நாமல் எம்.பியிடம் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ சட்ட இளமாணிப் பட்டத்தை எவ்வாறு பெற்றார் என்பது குறித்து விசாரிக்குமாறு குற்றப் புலனாய்வுத் துறைக்குப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டப் பட்டப்படிப்பை மேற்கொண்டதில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறப்படும் பல புகார்கள் எழுந்துள்ளதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஐஸ் போதைப் பொருளுடன் இராணுவச் சிப்பாய்கள் கைது

(கொழும்பு)

உப்புல் தெனிய பகுதியில் நான்கு இராணுவ விசேட படையணி வீரர்களை ஐஸ் ரக போதைப் பொருட்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அக்மீமன, ஹொரவ் பொத்தானை, லுனுகல மற்றும் பரசன்கஸ்வெவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கஹடகஸ்திகிலிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நகர்வுகளை கலேன்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## மினுவங்கொட சூட்டுச் சம்பவம்
### மூவர் நேற்றுக் கைது

(கொழும்பு)

மினுவங்கொட கல்லொலுவப் பகுதியில் நபரொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 35 வயதான ஒருவர் கடந்த 07 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை தொடர்பில் 24 மற்றும் 34 வயதான மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையின் பின்னர் சூத்திரதாரி தப்பிச் செல்வதற்கு உதவியமை, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, சதித் திட்டம் தீட்டியமை, போலி இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தி செசி இலக்கங்களை அழித்து, தகவல்களை மறைத்து மோட்டார் சைக்கிளை குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காக உதவி செய்தமை ஆகிய குற்றச் சாட்டுகள் சந்தேகநபர்கள் மூவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களில் ஒருவருக்கு ஏற்கனவே ருவன்வெல்ல நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## சகல நெல் ஆலைகளையும் பதிவு செய்யத்திட்டம்

சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவிலான சகல நெல் ஆலைகளையும் பதிவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை சகல பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியுமென்றும்நெல்இருப்பு தொடர்பான துல்லியமான தரவுகளைப் பெறும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் விவசாய அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்படாத அரிசி ஆலைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைவர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இணைய வழி மோசடி சந்தேக நபர்கள் கைது

"லிட்டில்ஹார்ட்ஸ்" என்ற பெயரில் போலிக் கணக்கைத் திறந்து பரிசுத் தொகை தருவதாகக் கூறி இணையத்தளம் மூலம் 29 இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்துறைப் பகுதியிலும் நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்ப பிரதேசத்திலும் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (13) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நொச்சியாகம, பலாவி பிரதேசங்களைச்சேர்ந்த 28 மற்றும் 23 வயதுடையவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகள் வாயிலாக தெரியவந்துள்ளது.

வாக்குமூலம் பெறப்பட்டதன்பின் சந்தேக நபர்கள் இருவரும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர படுத்தப் படவுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யோஷித, டேசிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டேசி ஃபொரஸ்ட் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நிதித் தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களை இழைத்துள்ளமை உள்ளிட்ட 3 குற்றச் சாட்டுகளின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

500 இலட்ச ரூபாவுக்கும் அதிக தொகைக்கு இரத்மலானை சிறிமல் உயன மற்றும் தெஹிவளைப் பகுதிகளில் காணி உள்ளிட்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக இந்தக் குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யோஷித ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கடந்த மாதம் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சிறிமல் உயனவிலுள்ள 34.5 பேர்ச்சஸ் காணியை 360 இலட்சம் ரூபாவுக்கும் அதிக தொகையைப் பயன் படுத்திக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் பிற்பகல் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட யோஷித ராஜபக்ஷ ஜனவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவைக் கொடுத்து இரத்தத்தை உறிஞ்சாதீர்!

## பூநகரியில் கவனயீர்ப்புப் போராட்டம்

(கண்டாவளை)

**பூநகரி வாடியடி பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையை இடமாற்றக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.**



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ-32 பிரதான வீதியின் வாடியடி சந்திக்கு அண்மித்த பகுதியில் இயங்கி வரும் விடுதியுடன் கூடிய மதுபான சாலையை இடமாற்றக்கோரி நேற்று பூநகரி பிரதேச செயலகம் முன்பாக அப்பகுதி மக்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மதுவைக் கொடுத்து எம் இரத்தத்தை உறிஞ்சாதீர், மூடு மூடு மதுக்கடையை மூடு, இளையோரை சீரழிக்கும் மதுக்கடையை மூடு, மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு! போன்ற பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் பூநகரி பிரதேச செயலாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களினால் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-315)

# நெல்லை உலர விடும் போது பாதுகாப்பு சமிக்ஞைகளை பயன்படுத்துங்கள்!

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

(நெளுக்குளம்)

தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வருவதனால் விவசாயிகள் வீதியோரங்களில் எவ்வித பாதுகாப்பு சமிக்ஞைகளும் இன்றி நெல்லை உலர விடுகின்றனர்.

இதனால் விபத்து சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தில் பாதுகாப்பு சமிக்ஞை இல்லாமல் சிறு வீதிகளில் நெல் உலரவிடப்பட்டதனால் கடந்த இரு தினங்களில் இருவர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறித்த விடயம் பேசப்பட்டு வீதியில் மூன்றில் ஒரு பகுதியிலேயே நெல் உலர்த்த முடியும் எனவும் இதனை பொலிஸார் கண்காணிப்பு செய்ய வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது சிறு வீதிகளிலும், வீதியின் அரைவாசி பகுதிகளிலும் அதற்கு மேற்பட்ட பகுதிகளிலும் நெல் உலரவிடப்படுகின்றது.

எனவே நெல்லினை உலர விடுவோர் போக்குவரத்துக்கு இடையூறுகள், விபத்துக்கள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு சமிக்ஞைகளை பயன்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (6-8-299)

# facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3292

**டாருஸ்**

அவன் அவன் கஞ்சிக்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கான்.



இவனுக்கு காதலர் தினம் கொண்டாட காதலி இல்லை என்று ஸ்டேட்டஸ் போடுறான்... படுவா..

**சஸ்விகன்**

ஏன்டா அம்மியில் அரைக்கும் போது வரும் வாசனை ஒருநாளும் மிக்ஸியில் அரைக்கும் போது வருவதில்லை



அட மிக்ஸி மூடியை திறந்து வைத்து அரைத்துப் பாருங்கள் நல்லா குபீர் என்று வாசனை வரும்

**சாதுமிரா**

நமக்காக உயிரை கொடுக்கிறவர்களை தான் லவ் பண்ணனும் என்றால்



ஆடு, கோழியைத் தான் லவ் பண்ணனும்

**விகாஸ்**

காதல் என்பது கார் மாதிரி



இல்லாதவனுக்கு 'கனவு' இருப்பவனுக்கு 'செலவு'

**வைசாலி**

அடிச்சது அம்மா தான் என்று தெரியும்



ஆனாலும் அழுதுகொண்டு அம்மாவிடம் தான் ஓடும் குழந்தைகள்

**சஞ்சீவ்**

லவ் பண்ணுறவனுக்கு முகம் பிரகாசமாக இருக்கும்



லவ் பண்ணாதவனுக்கு வாழ்க்கையே பிரகாசமாக இருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## பிரதமர்...

பெறும் நிகழ்வில் கலந்துகொண்டு அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

தொடர்ந்து இன்று மாலை ஏழாலை, சுழிபுரம், சண்டிலிப்பாய் பகுதிகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்பில் பிரதமர் பங்கெடுக்கவுள்ளார்.

இதைத் தொடர்ந்து நாளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் பிரதமர் ஹரிணி செல்லவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

## கம்பியால்...

குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது,

முல்லைத்தீவு - முள்ளியவளை - முறிப்புப் பகுதியில் ஒரு குழுவினர் இணைந்து, குடும்பஸ்தர் ஒருவருடன் நேற்று முன்தினம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7,299)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## புதுக்குடியிருப்...

25 லீற்றர் 750 மில்லிலீற்றர் கசிப்பு புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் உள்ள வீட்டிற்கு முன்னால் விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் ஒட்டுசுட்டான் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-7)

## மின்வெட்டுத்...

ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மின்வெட்டு தொடர்பில் அரசாங்கம் சபைக்கு அறிவிக்க வேண்டும். இந்த ஞாயிற்றுக்கிழமை மின்வெட்டு இடம்பெறுமா? இங்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு போகின்றனர். மின்சாரத் தடை ஏற்படுகிறது. மின்வெட்டுக்குத் தீர்வு என்ன? இந்த ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. அதனால் அமைச்சர் இது தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

சூரியசக்தி மின் உற்பத்திக்கமைய கேள்வியிருக்காவிட்டால் அந்தத் தொழிற்பாடு ஞாயிற்றுக்கிழமை நடக்காவிட்டால் மின் தடை ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது.

இதனால் இதற்கு நீங்கள் வழங்கும் தீர்வு என்ன? மின்வெட்டுக்கான காரணங்களையும் நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றார். (ம-7)

## மயங்கி...

வேலியில் தங்கியிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பேரின்பம் கோகிலவாசன் (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் அச்சுவேலிப் பகுதியில் மேசன் வேலை செய்வதற்காக தங்கியிருந்த சமயம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பொலிஸ்...

கோப்பாய்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி வெதகெதர கடந்த மூன்றாண்டுகளுக்கு முதல் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றிருந்தார்.

தமிழ்மொழி பேசக் கூடியவராக இருந்தமையால் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இவரை இலகுவில் அணுகக்கூடியவாறு இருந்தது.

அத்தோடு, பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் குற்றச்செயல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், பொறுப்பதிகாரிக்கு, பதுளைக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் தமிழ் மொழி பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகள் கடமையாற்ற வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரி வரும் நிலையில், தமிழ் மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரி திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. (ம-7,33)

## வேறு நாடுகளு...

சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த அமைச்சர், "சீனாவுக்கு அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்குவதற்காக அதானியின் திட்டத்தை நிறுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கவில்லை.

அதானியின் திட்டத்தை இப்போதைக்கு சரி என ஏற்றால் சில காலங்களில் அந்த முடிவு தவறாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

குறித்த காற்றாலைத் திட்டத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் பயன் கிட்டுமா? என்பது தொடர்பில் பல விடயங்களை ஆராய வேண்டியிருந்ததே தவிர அவர்களை நிறுத்திக் கொண்டு வேறு யாருக்கும் வழங்கும் நோக்கம் இருக்கவில்லை.

நாங்கள் ஏன் அவருக்கு கொடுப்பதா, இவருக்கு கொடுத்தால் நலமா என பேசுவதிலும் பார்க்க எமது நாட்டில் உள்ள முதலீட்டாளர்களையும் புலம்பெயர் நாடுகளில்உள்ளமுதலீட்டா ளர்களையும் அழைத்து திட்டங்களை மேற்கொள்வதற்கு எண்ணி உள்ளோம். அதற்கான அழைப்பினை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

ஆகவே காற்றாலைத் திட்டத்திலிருந்து அதானி விலகியதில் எவ்வித அரசியல்உள்ள நோக்கமும் கிடையாது" என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# வலிப்பு வந்தவர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த நபர் திடீரென வலிப்பு ஏற்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த 69 வயதான நபரே இவ்வாறு திடீரென உயிரிழந்தவராவார். (ம-7,30)


மஹஜன சம்பத
திகதி 2025.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 5747
F 0 4 9 3 9 1
அத சம்பத
F 9 3 9 1
சீட்டிழுப்பு இலக்கம் 322

தன நிதானய
திகதி - 2025.02.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1777
I 30 49 61 77 I
60301

மெகா பவர்
திகதி 14/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2095
U 23 30 71 77 78

ஜய
திகதி 2025.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 015
V 1 8 3 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3989
சீட்டிழுப்பு திகதி 14.02.2025
D 08 18 39 74
D

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 1056
கன்னி 01 09 54 60 கன்னி
59326 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.02.2025 வெற்றி வாரம் 455
ஆங்கில எழுத்து R
7 6 0 9 8 6
97763
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,118,000.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2721
சீட்டிழுப்பு திகதி 2025.02.14 தினம் வெள்ளிக்கிழமை
12 57 61 66 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,153,892.80

சனிதா
திகதி 14.02.2025 வெற்றி வாரம் 4882
45 49 50 71 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,405,741.60
68709

சசிரி
வெற்றி வாரம் 622
14.02.2025 வெள்ளிக்கிழமை
03 11 18
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4433
சீட்டிழுப்பு திகதி 14.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
06 09 17 27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.11,704,402.00
128462

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 37 04 23 27 53
1897
14.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,293,223.00

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2547
சீட்டிழுப்பு திகதி: 2025.02.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,539,969.60
09 11 17 25 N
607028


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்களை ஒதுக்கி
# ஆட்சியை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது - நாமல்

எதிரணிகள் மற்றும் அரச ஊழியர்களை அச்சுறுத்தி, ஒடுக்கி ஆட்சியை முன்னெடுப்பதற்கு அநுர அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளைத் தேசிய மக்கள் சக்தி வழங்கியது.

அதனைத் தற்போது நிறைவேற்ற முடியாதுள்ளதால் பாராளுமன்றத்தில் எதிரணியையும், வெளியில் அரசாங்க ஊழியர்களையும் அச்சுறுத்தல் மூலம் ஒடுக்கி ஆட்சியை நடத்தப் பார்க்கின்றது.

ஜனாதிபதி அண்மையில் பொலிஸ் ஆணைக்குழுவை விமர்சித்திருந்தார். இதைத் தொடர்ந்து 139 பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அரசியலையே தற்போது நடத்துவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. தமது அரசியல் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


**ஊரெழுவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு**

- பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம்
- 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்.
- காணியின் இரண்டு பக்க பாதையும் தார் வீதி
- நல்ல சூழல்
- செம்மண்.

(3414)

**077 617 2892**


## வடக்கில்...

களில் ஈடுபடும் முகவர்கள் இளையோரை இலக்கு வைத்து, அவர்களை சமூக ஊடகங்கள் ஊடாக அணுகி, ஆசை வார்த்தைகளைக் கூறி பெருந்தொகையான பணத்தினை பெற்று மோசடி செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம், மானிப்பாய் , கிளிநொச்சி உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வெளிநாடு செல்வதற்கு வங்கிக் கணக்கில் பெருந்தொகை பணம் வங்கிக் கணக்கில் இருப்பில் இருக்க வேண்டும் எனக் கூறி , வங்கிக் கணக்கு இலக்கங்கள், அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்று , வங்கியில் உள்ள பணத்தினை மோசடியாக கும்பல் பெற்றுக் கொண்டு தலைமறைவாகி வருகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாடு செல்ல காத்திருக்கும் இளையோர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு முகவர்கள் ஊடாக பயண ஏற்பாடுகளை செய்து சட்ட ரீதியான முறையில் செல்ல வேண்டும்.

இது தொடர்பில் இளையோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டாலே இவ்வாறான மோசடிச் சம்பவங்களில் இருந்து அவர்கள் தப்பிக்கொள்ள முடியும். இல்லையெனில் பெருந்தொகை பணத்தினை இழக்க நேரிடும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## உள்ளூராட்சித்...

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16 இன் விதிகளின்படி பிரதமர் ஹரிணி அமரசூரிய சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் பாராளுமன்றம் நேற்று கூடிய போது இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 121(1)ஆவது பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டு மூவரடங்கிய நீதியரசர்கள் கொண்ட ஆயம் முன்னிலையில் கிடைக்கப்பெற்ற சட்டமூலம் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் நேற்று அறிவித்தார்.

நீதியரசர்கள் குழாத்தில் இருவர் பின்வருமாறு தீர்ப்பளித்ததாகக் குறிப்பிட்டார்,

இந்த சட்டமூலம் முழுவதுமாகவும், குறிப்பாக பிரிவுகள் 2 மற்றும் 3 அரசியலமைப்பின் பிரிவு 12(1) உடன் முரணாக இருப்பதால், அரசியலமைப்பின் பிரிவு 84(2) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க சிறப்பு பெரும்பான்மை வாக்குகளால் மட்டுமே அதை நிறைவேற்ற முடியும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என சபாநாயகர் குறிப்பிட்டார்.

நீதியரசர் குழாத்தில் எஞ்சியுள்ள நீதியரசர் பின்வருமாறு தீர்ப்பளித்ததாகக் குறிப்பிட்டார்,

சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படுவது இல்லை என்பதால் அதனை பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை ஒன்றின் மூலம் நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிட்டதாக சபாநாயகர் தெரிவித்தார். (ம-7)


**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127**

**கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு**

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

V2 "நாங்கள் உங்களோடு"



**ஆர்க் . என் . கம்பனி**



150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(3424)

Hotline : 071 535 7799/ 071 973 9917

**வீடு வாடகைக்கு**

கொக்குவில் பிரம்படி வீதியில் புத்தம் புதிய வீடு வாடகைக்கு உண்டு.

(3383)

**0777 181 970**

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலி மற்றும் கல்வியங்காடு பகுதியில் லொத்தர் சீட்டு விற்பனையாளர் தேவை.

(3422)

**077 078 2395**
**077 131 2534**

**வேலையாட்கள் தேவை**

| | |
|---|---|
| மேசன் | - Rs. 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs. 2500.00 |
| வெல்டர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| வயறிங் | - Rs. 3000.00 |
| பிளமிங் | - Rs. 3000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs. 3000.00 |

(3425)

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு : 077 210 0749 (காலை 8.30 – மாலை 5.00 வரை)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2267)

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :

(838)

**075 033 6759**

**Happy Supermarket - உரும்பிராய்**

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 225/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 10Kg விஜிதா | - 2720/= | |
| 1Kg கீரிச் சம்பா | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 400g லக்ஸ்பிறே | - 975/= | ~~1050/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 735/= | ~~780/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

400g Anchor 999/= ~~1050/=~~

1Kg சன்லைட் பவுடர் 345/= ~~380/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(847)

Happy Supermarket 0777 8080 30


# கண்ணீர் அஞ்சலி

அமரர் **செல்வமலர் சிவகுமாரன்**



அவர்களின் பிரிவால் துயருற்றுத் தவிக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவில் துயருறும்
நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்களும்
S.V.T கோபுரம் அரிசி ஆலை,
நெளுக்குளம், வவுனியா.

மலர்வு 28.08.1964
உதிர்வு 13.02.2025

(846)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org